பிரிவு 1  திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர், எனக்கு மிகவும் பிடித்த சைவ நாயனார். அவரிற்கு மூன்று வயதாக இருக்கும் போது, ஒருநாள் தந்தையுடன் கோயிலுக்குச் சென்றார். தந்தை திருக்குளத்தில் நீராடச் சென்றார். அவர் நீரில் மூழ்கியதும், தந்தையை காணாததால் , சம்பந்தர் பயந்து “அம்மா! அப்பா!” என்று அழுதார்.

அப்போது சிவபெருமானும் பார்வதி தேவியும் தோன்றினர். பார்வதி தேவி தன் தெய்வீகப்பாலை அவருக்குக் கொடுத்தார். அதை அருந்தியவுடன் ஞானம் பெற்ற அவர் “தோடுடைய செவியன்” என்ற முதல் பாடலைப் பாடினார்.

அதன்பின் அவர் திருஞானசம்பந்தர் என்று அழைக்கப்பட்டார்.அவர் சிவபெருமான் மீது இனிமையான தேவாரப் பாடல்கள் நிறையப்பாடி வைகாசி மூல நன்நாளில் இறைவனுடன் கலந்தார்.